## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)

### இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

### ஜனவரி – பிப்ரவரி 2022
### A011 காப்பிய இலக்கியம்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காப்பியம் எவ்வகை இலக்கியத்தில் அடங்கும்?
2. பெரிய புராணத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
3. திருநாளைப் போவார் என்றழைக்கப்பட்டவர் யார்?
4. பண்டைய கிரேக்க வரலாற்றைத் தம் காப்பியங்களில் கூறியவர் யார்?
5. பெருங்கதையின் ஆசிரியர் யார்?
6. தேம்பாவணியை இயற்றியவர் யார்?
7. கலிமா என்பது யாது?
8. காப்பியத்திற்குரிய இலக்கணத்தைக் கூறிய நூல் எது?
9. பூங்கொடிக் காப்பியம் இரட்டைக் காப்பியங்களின் எதன் நகல் எனச் சொல்லப்படுகின்றது?
10. அகலிகை வெண்பாவின் ஆசிரியர் யார்?
11. வீராயி காப்பியக் காதலர்கள் இறப்பதற்குக் காரணமாக அமைந்தது எது?
12. இராவண காவியத்தின் ஆசிரியர் யார்?
13. தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது பெற்ற காப்பியம் எது?
14. மலையுறையடிகள் என்னும் கதாப்பாத்திரம் எவரை நினைவுறுத்துகிறது?

15. யசோதர காவியம் உணர்த்தும் அறத்தினுள் ஒன்றனைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பெருங்காப்பியம் சிறுகாப்பியம் இரண்டிற்குயிடையே உள்ள வேறுபாடுகள் என்ன?
2. முத்தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படுவது எது? ஏன்?
3. கம்பருக்கு இணையாகப் பேசப்படும் உலகக் கவிஞர்களுள் மூவரைக் குறிப்பிடுக.
4. பெருங்கதை எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?
5. வீரமாமுனிவரின் படைப்புகளைக் கூறுக.
6. இசுலாமியருக்குரிய ஐம்பெருங் கடமைகள் எவை?
7. பூங்கொடி காப்பியம் – குறிப்பு வரைக.
8. அகலிகை வெண்பா, அகல்யா, வீராயி ஆகிய முப்பெருங்காப்பியங்களின் முக்கியத்துவம் யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) காப்பிய இலக்கணம் குறித்துக் கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்து விவரி.

2. (அ) பெரிய புராணத்தின் சிறப்புகளை விவரி.

   (அல்லது)

   (ஆ) பிற கிறித்தவக் காப்பியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) வீராயி காப்பியத்தின் வாயிலாக அறியலாகும் சமூக அவலம் குறித்து விளக்குக.

   (அல்லது)

   (ஆ) வில்லிபாரதம் காப்பிய அமைப்பினை விவரி.

***